[1972 நவம்பர் 14

Accommodation for the Government Arts College for Women, Thanjavur

* 292 Q.—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that there is difficulty in holding classes for want of class rooms after introduction of English medium sections in Government Arts College for Women, Thanjavur ; and

(*b*) if so, the steps taken?

தஞ்சாவூர் அரசினர் மகளிர் கல்லூரிக்கு இடவசதி

திரு. ஏ. ஆர். தாமோதரன், (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் அரசினர் மகளிர் கல்லூரியில் ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகள் தொடங்கப்பட்ட பின்னர், போதிய வகுப்பறைகள் இல்லாமையால் வகுப்பு நடத்துவதில் இடர் ஏற்பட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தஞ்சை அரசினர் மகளிர் கல்லூரியில் இப்போதுள்ள இடவசதியே பல்வேறு வகுப்புகளை நடத்துவதற்கு போதுமானதாக உள்ளது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Bifurcated Courses of study

* 293 Q.—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to give up the Bifurcated Courses of Study in Educational Institutions in the State; and

(*b*) if so, the reasons therefor?

1972 நவம்பர் 14]

இரண்டாகப் பிரிக்கப்பட்ட பாடமுறைகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்திலுள்ள கல்வி நிலையங்களில் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பாடமுறைகளைக் (Bifurcated Courses) கைவிடுவதற்கான செயற்குறிப்பு எதும் (அரசிடம்) உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) அத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இந்தமாதிரி கல்வி நிலையங்களை வாரியம் Board ஆக்குவதற்கு அரசாங்கம் ஏதேனும் திட்டம் வகுத்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட உத்தேசமில்லை.

Working hours in the Educational Institutions

* 294 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware of the protest of the teaching staff of the Secondary Grade Educational Institutions against the increase in the working hours; and

(*b*) if so, the action taken thereon?

பள்ளிகளில் வேலை நேரம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேலை நேரத்தை உயர்த்துவதற்கு உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் எதிர்ப்பு தெரிவித்தது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது ?